★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 5 ஜூலை 11 இதழ் 189

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 21—8—83

## "புதிய நம்பிக்கையுடன் பேச்சுக்கள் நடத்த தீர்மானித்துள்ளோம்!"

### சென்னையில் 'அமிர்' அறிவிப்பு

சென்னை, ஆக 20

''இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் பேச்சுக்களை எதிர்காலத்தில் நடத்துவதில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆர்வங்கொண்டிருக்கவில்லை. ஆயினும் இந்தியப் பிரதமரின் முயற்சிகளால் ஒரு புதிய நம்பிக்கையுடன் ஜனாதிபதி ஜயவர்த்தனவோடு பேச்சுக்கள் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.''

இவ்வாறு இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார். திரு. அமிர்தலிங்கம் நேற்று பொது நலவாய அமைப்பின் தமிழ் நாட்டுக்கிளை ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''இலங்கையில் இந்திய வம்சாவளித் தமிழ்பேசும் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள். அவர்களின் போராட்டங்கள் வெற்றிபெறவும், அவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் இந்தியப் பிரதமர் இந்திராவின் தலையீட்டையடுத்து இலங்கை ஜனாதிபதியுடன் நாம் நடத்தவுள்ள பேச்சுக்கள் பெரிதும் துணை புரியும்.

இலங்கைத் தமிழ் மக்களின் இன்னல்களுக்குத் தமிழ் நாட்டுடன் இணைந்து பாரத மக்கள் ஒற்றுமையாக தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமக்குப் புத்துணர்வையும், மனஆறுதலையும் தருகின்றது. இலங்கைத் தமிழர்கள் சார்பில் பாரத மக்கள் காட்டிய அனுதாபத்துக்கு நன்றி தெரிவிக்கின்றேன்'' என்றார்.

இச்கூட்டத்தில் தமிழக சபாநாயகர் திரு. ராஜாராம், சட்டமேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் ஆகியோர் உட்பட பலர் பெருமளவு

(6-ம் பக்கம் பார்க்க)

# அகதிகளாக வந்த ஆசிரியர்களுக்கு

# யாழ்ப்பாணத்தில் தற்காலிக இடம்!

## இம்மாத இறுதியில் ஆகஸ்ட் சம்பளம்!

(ஏ. வி. மாணிக்கம்)

பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அகதிகளாக வந்துள்ள தமிழ் ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு விண்ணப்பித்த 3 பாடசாலைகளில் ஒன்றில் தற்காலிகமாக கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மாதம் 29-ம் திகதி இவர்கள் கடமையை ஏற்பார்கள்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்றுக் காலை நடந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் கூட்டத்தில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு மகாசிவம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் சுமார் 1500 பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். கணிசமான அளவு ஆசிரியைகளும் வந்திருந்தனர்,

ஆகஸ்ட் மாத சம்பளத்தை மாவட்ட ரீதியில் இம் மாதம் 29, 30, 31ம் தேதிகளில் வழங்கப்படுமென்றும், பின்னர் மூன்று மாத வேதனம் முற்பணமாக வழங்கப்படுமென்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கல்வி அமைச்சுடனும், கல்விப் பணிப்பாளருடனும் தொடர்பு கொண்டே மேற்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக திரு மகாசிவம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சம்பள படிவங்கள், இடமாற்ற படிவங்கள், மூன்றுமாத வேதனப்படிவங்களும் வழங்கப்பட்டன. இப்படிவங்களைப் பெருதவர்கள் யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் வீதியிலுள்ள இலங்கைதமிழர் ஆசிரியர்சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியம் பெற ஏற்பாடு

(சுண்டிக்குளி)

யாழ். மாநகரப் பிரிவுக்குள்ளும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள உப தபால் நிலையங்களில் வழங்கப்பட்ட, அரச ஊழியர்களின் ஓய்வூதியம் தற்போது யாழ். பிரதம தபால் நிலையத்தில் வழங்கப்படுகிறது.

இதற்காக சில கருமபீடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாதப் பணத்தை இங்கேயே பெறவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## தனியார் பஸ் கட்டணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாநில தனியார்வாகன சேவைச் சங்கத்தினரும் பஸ் கட்டணத்தை அதிகரித்துள்ளனர்.

வடமாநில தனியார்வாகன சேவைச் சங்கத் தலைவர் திரு. ஆர். பத்மநாதன் இம்மாதம் 18-ம் தேதி பஸ்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

50 சதத்திலிருந்து 4ரூபா75 சதம்வரை 50 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 5 ரூபாவில் இருந்து 9 ரூபா 75 சதம்வரை 1ரூபாவும், 10 ரூபாவிலிருந்து 14ரூபா75சதம் வரை 2 ரூபாவும், 15 ரூபாவிலிருந்து 19 ரூபா 75 சதம் வரை 3 ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (சு)

## "1977ல்பத்தாயிரம் அகதிகளுக்கு புகலிடம் அளித்த நாம் இன்னும் உதவ தயாராக உள்ளோம்"- கிளிநொச்சி எம். பி.

(கிளிநொச்சி)

அகதிகளின் நல்வாழ்வில் கிளிநொச்சி மக்கள் காட்டி வரும் பெரும் அக்கறையையிட்டு நான் பெருமிதமும் மகிழ்ச்சியும் கொள்கிறேன். 1977-ம் ஆண்டில் பத்தாயிரம் அகதிகளுக்கு புகலிடமும் மறுவாழ்வும் அளித்த நாம் இன்றும் எத்தனை ஆயிரம் அகதிகளுக்கும் உதவத்தயாராகவே இருக்கிறோம்.

இவ்வாறு கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு அகதிகளாக வந்துள்ள சுமார் 500 அகதிகளின் எதிர்காலம் பற்றிய நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி எம். பி., வி. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

சென். திரேசா ஆலயத்தில் வண. பிதா பயஸ் அடிகள் தலைமையில் நடைபெற்ற இவ் ஆலோசனைக் கூட்டத்தில் குருகுலம், மகாதேவா ஆச்சிரமம், இந்து பரிசித்து ரோட்டறிக் கழகம் லயன்ஸ் கழகம் உட்பட 46 சமூகநல நிலையங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாவட்டசபை உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா, ரோட்டறிக் கழகச் செயலாளர் திரு. ப. வை. ஜெயபாலன், மாணவர் ஒன்றிய அமைப்பாளர் து. தர்மானந்தசிவம், வண. பிதா ஜெபநேசன் ஆகியோரும் அகதிகளின் நல்

(6-ம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு நிதி உதவி

(மட்டுவில்)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல ஊழியர்களும் தமது ஒரு நாள் சம்பளத்தை அகதிகள் முகாமிற்கு கொடுத்துதவினர். சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், அதன் 22 கிளைகளின் முகாமையாளர்

(6-ம் பக்கம் பார்க்க)

## வெரித்தாஸ் வானொலியில் இலங்கைசெய்திகள்நிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையைப்பற்றிய தகவல்கள் ஒலிபரப்புவதை பிலிப்பைன்ஸ் நாட்டின் 'வெரித்தாஸ்' வானொலி இப்போது நிறுத்தியுள்ளது.

இலங்கை நேரப்படி இரவு 7-30 மணிக்கும் 8-30 மணிக்குமிடையில் இடம்பெறும் தமிழ் நிகழ்ச்சி ஒலிபரப்பின் போது, இலங்கை பிரச்னைகள் குறித்து விரிவான தகவல்களைத் தினசரி ஒலிபரப்பி வந்தது. இந்த வானொலி நிகழ்ச்சிகளை கேட்போர் தொகை வேகமாக இங்கு அதிகரித்து வந்தது. ஆயினும் கடந்த சில நாட்களாக 'வெரித்தாஸ்' வானொலி செய்தி அறிக்கை பலருக்கும் ஏமாற்றத்தையே அளித்தது.

'வெரிதாஸ்' இலங்கைப் பிரச்னை குறித்து தவறுன

(2-ம் பக்கம் பார்க்க)

### செய்தித் தணிக்கை

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## கொழும்பிலிருந்து தூத்துக்குடி செல்லும் இந்திய வம்சாவளி அகதிகள்

(கொழும்பு)

இந்தியப் பயணிகள் கப்பலான 'பாரத் சீமா' கொழும்பிலிருந்து 300 இந்திய வம்சாவளி மக்களை ஏற்றிக்கொண்டு தூத்துக்குடிக்குச் செல்கின்றது.

'பாரத் சீமா' வில் செல்லும் இந்தியவம்சாவளி மக்கள் கலவரங்களால் பாதிக்கப்பட்டு கொழும்பு அகதிகள் முகாம்களிலும், வெளிமாவட்டங்களில் உள்ள முகாம்களிலும் தங்கியிருந்தவர்கள் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்கள்.

தலைமன்னார் மூலமாகக் கப்பல் பயணம் செய்வது தற்போது அசாத்தியமாகவுள்ளதாலேயே இப்பயணிகள் 'பாரத் சீமா' இந்தியா திரும்புவதால் அதில் தூத்துக்குடி வருகின்றனர்.

இந்தியா மூன்று கப்பல்களை உதவிப் பொருட் களுடன் அகதிகளை ஏற்றிச் செல்லும் பணிகளுக்கென இலங்கை அனுப்பியிருந்தது. இக்கப்பல்களில் இரண்டு தமதுபணியை முடித்தபின்னர் இந்தியா திரும்பியுள்ளன.

தூத்துக்குடியில் 'பாரத் சீமா' மூலமாகவரும் இந்திய வம்சாவளி அகதிகளை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய சேவைகளை உடன்வழங்க ஒழுங்குகள் விரிவாகச் செய்யப்பட்டுள்ளன. (கி)

# தென்கிழக்காசிய நாடுகளுக்கு

## ஜனாதிபதியின் தூதர் பயணம்!

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் விசேட தூதுவராக எட்டு கிழக்காசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதியின் சகோதரும், சட்டத்தரணியுமான திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கியூ. ஸி. நேற்று முன்தினமிரவு பயணமானார்.

நாட்டில் தலையெடுத்த வன்செயல்களையடுத்து ஜனாதிபதியின் பிரதிநிதியாக டில்லி சென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சமீபத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவந்தார்.

இப்போது தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று அங்கு இங்குள்ள நிலைமையை விளக்குவார். நட்புறவை வளர்க்கும் நோக்குடனும், பரஸ்பரம் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுத்தவே இவர் இந்நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

தென் கொரியா, ஜப்பான், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், சீனு, தாய்லாந்து, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கே திரு. ஜெயவர்த்தன விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

## பார்த்தசாரதி 25-ம் திகதி வருவார்

(சென்னை)

இந்தியாவின் சிறப்புப் பிரதிநிதி திரு. வி. பார்த்தசாரதி இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி வியாழக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். முன்னர் இவர் இருபத்திநான்காம் திகதி விஜயம் செய்வதாக இருந்தது.

## ஜனாதிபதியின் பிரிட்டிஷ் விஜயம் ரத்து

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அக்டோபர் மாதம் பிரிட்டனுக்கு மேற்கொள்ளவிருந்த தமது விஜயத்தை ரத்துச்செய்துள்ளார்.

ஆழ்ந்த கவலையுடனும், அதிர்ச்சியுடனும் இந்தத் தகவலைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி நேற்று அறிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 80 வீதம் பாவனைக்குரிய மினிவான் டயர்கள். 700×15, 750×15 அளவுகளில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சிவபாலன் செல்வபதி நெல்லியடி கரவெட்டி தொலைபேசி-98
8195

நல்ல இன பம்பாய் வெண்காயவிதை (பல்ப்ஸ்) காய் விற்பனைக்குண்டு. மு. குமாரசாமி அராலி மேற்கு, வட்டுக்கோட்டை அல்லது பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.
8266

சில்லாலையில் சகல வசதிகளுடன் புதிய வீடு 10 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 157 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், 8236

சாவகச்சேரி தபாற்கந்தோர் பொலிஸ் நிலைய வீதி, இருபக்கமும் பாதையுள்ள 5 பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு க. சங்கரமூர்த்தி ஞானவாசம் பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி. 8231

ஒரு (24''Phillips Black and White Television) கறுப்பு வெள்ளை நிறமுடைய 24'' பிலிப்ஸ் T. V. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். மேலும் விலை விபரங்களுக்கு யஸ்ரின் பஸ்தியாம்பிள்ளை 21, வேம்படி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். 8223

12 சிறீ தொடர்பிலக்கமுள்ள Morris Marina மோட்டக்கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி 10/5 சிவன்கோவில்வீதி, திருநெல்வேலி. 8243

வெள்ளைநிற Toyata Town ace வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: C. தருமராசா, ஸ்ரான்லி கவுஸ், 95/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(8257)

மானிப்பாய் சுகாதாரக் கந்தோருக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. மகாலிங்கம், M. O. H. லேன், மானிப்பாய் - மேற்கு.
(8274)

நீர்வேலி, பருத்தித்துறை வீதிக்கண்மையில் ஆலயங்கள், பாடசாலைகள், தபால் நிலையம் ஆகியவற்றிற்கருகில் மின்வசதியுள்ள இடத்தில், பயன்தரு மரங்களுள்ள 10 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. புதிய சுற்று மதில், மலசலகூடம், கிணறு ஆகியன அமைக்கப்பட்டுள்ளது. தொடர்பு மு. வே. நவரத்தினம் வயிரவர் கோவிடில, 12/1 விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
8272

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் சகலவசதிகளுடனும் இயங்கும் அச்சகம் கொமிஷனுக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு விளம்பரதாரர் 28, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 8268

வெளிநாட்டில் இருந்து புதிதாகக் கொண்டுவரப்பட்ட (National Video VHS NV300 உடனடியாக விற்பனைக்கு உண்டு. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல;8270. மே./பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (8270)

சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியில் 4 பரப்பு வீடுகட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. உடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8289 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
8289

உத்தரவு பெற்ற நில அளவையார் மூலம் அளக்கப் பெற்ற வீடு கட்டுவதற்கு சிறந்த காணி 4 பரப்பும் 02 குளியும் விற்பனைக்கு உண்டு விரும்பியோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இ. பாஸ்கரலிங்கம், ''லிங்கவாசா'' ஊரெழு கிழக்கு, ஊரெழு. 8291

கடைகள் தொழிற்சாலை கட்டுவதற்குச் சிறந்த காணி ஒன்றரைப் பரப்பு திருநெல்வேலி சந்தியில் உள்ளது. தொடர்பு கொள்க முருகேசு 73/1, பலாலி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம். 8297

புதுக்குடியிருப்பு சந்திக் கருகாமையில் முல்லைத்தீவு பிரதான வீதியில் 6 பரப்பு அறுதிக்காணி உடன் விற்பனைக்குண்டு நேரில் வரவும் கடைகள் தியேட்டர் டிஸ்பென்சரி அரிசி ஆலை அமைக்க சிறந்தஇடம்க. வீரசிங்கம்10-ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. 8296

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கருகில் வீடு கட்டவும் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்வதற்கும் ஏற்ற பெருமளவு காணி விற்பனைக்குண்டு. பரப்பு 15ஆயிரம்வரை கேள்வியில் உள்ளது. விபரங்களுக்கு கி. காசிப்பிள்ளை 'வில்வவாசம்' தெல்லிப்பழை மேற்கு தெல்லிப்பழை. 8294

நுணுவில் சந்தியில் சகல வசதிகளுடனன வீட்டுடன் 5 பரப்புக் காணியும், மாங்குளம் மார்க்கட் முன்பாக இரு கடைகளும், அல்லைப்பிட்டியில் பயிர்ச் செய்கைக்குகந்த 55 பரப்புக்காணியும், அரியாலை, ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், சுண்டிக்குளி, மானிப்பாய், திருநெல்வேலி, நாவற்குளி ஆகியஇடங்களில் வீடு கட்டக்கூடிய காணித் துண்டுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு மல்ரி சேவிசஸ், த டன்லப் ஸ்ரோஸ் 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23541. (8301)

## விற்பனைக்கு

புதிதாக அறுவடைசெய்த சணல் விதைகள் விற்பனைக்குண்டு. கரும்பு தோட்டம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சி.
8290

இயக்கச்சிச் சந்திக்கண்மையில் வீடு, கிணற்றுடன் கூடிய 10 பரப்புத் தென்னங் காணி விற்பனைக்குண்டு, (பிரதான வீதிக்கண்மையில்) தொடர்பு கொள்க: ப. பொன்னுத்துரை சடற்தொழில் பயிற்சிநிலையம், 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (கிழமை நாட்களில்மட்டும்) 8248

கடையுடன் 2 பரப்புக் காணி 3 பேஸ் மின்சாரம் நல்ல தண்ணீர் வசதியுடன் கண்டி வீதி சாவகச்சேரி சந்தைக்கு மிக அண்மையில் விற்பனை அல்லது வாடகைக்கு உடன் தொடர்பு கொள்ளவும். கிரியோண் கூல்பார், நவீனசந்தை, சாவகச்சேரி.
8287

பருத்தித்துறையில் பிரசித்தி பெற்ற மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் உதிரிப் பாகங்கள் தண்ணீர்ப்பம்புகள் ஜெனரேற்றர்கள் விற்பனை செய்யும் ஸ்தாபனம் விற்பனைக்குண்டு. மொத்தவிலை 300,000/- உடன் பணம் எதிர்பார்க்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8265 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 8265

யாழ். நகர் சுண்டிக்குளி 21/2 A ஈச்சமோட்டை றோட்டில் ஒன்றரைப் பரப்புக்காணி சிறிய வீட்டுடன் கிணறு மலசல கூட வசதியுடன், உடன் விற்பனைக்குண்டு. S. மகேஸ்வரி 6/4 கன்னாதிட்டி ஒழுங்கை யாழ்நகர். 8277

## தேவை

வர்த்தக வாகனங்கள் செலுத்த அனுபவமுள்ள சாரதிகள் தேவை. விண்ணப்பிக்கவும். ஓட்டோஸ் லிமிட், யாழ்ப்பாணம். 8282

யாழ் நகரிலுள்ள முன்னணி பொறியியல் நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பின்வரும் வேலையாட்கள் உடன் தேவை. பொருத்துனர்கள், வெல்டேர்ஸ், ரேணேர்ஸ், மோல்டேர்ஸ், அனுபவத்துக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8226 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
8226

யாழ்ப்பாணத்தில் நல்ல சுற்றுடலில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது விலைக்கு உடன் தேவை. தொடர்பு: விளம்பரதாரர் 28, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
8269

I. C. M. A - Section Aக்குரிய Study Packs, Suggested Answers ஆகியன தேவைப்படுகின்றது. வைத்திருப்பவர்கள் கடித மூலம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 8295 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8295

சமையல் வேலைக்கு அனுபவமுள்ள நடுத்தர வயதுடைய பெண் வேலையாள் உடனே தேவை. தொடர்பு கொள்ளவும், இரட்சணிய சேனை இல்லம், கண்டி வீதி, கைதடி.
8303

## தேவை

கீழ் குறிக்கப்பட்டிருக்கும் ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கணக்காளர் தேவை. புடைவை விற்பனையில் அனுபவமுள்ள ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கலாம், மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
8300

## சேவை

குடிநீர் பிரச்சினையா? கற்பாரா? கோடையில் தோட்டம் செய்ய நீர் போதாதா? நல்ல நீரோட்டம் பார்த்து கிணற்றினுள் துளையிட அடையாளமிட வேண்டுமா? நிலையத்துக்கு ரூபா 200/-போக்குவரத்து தனி. பா. இராமச்சந்திரன் அம்மன் கோவிலடி, காங்கேசன் வீதி, வல்வெட்டித்துறை. (8242)

## வகுப்புகள்

I.C.M.A.-Section A, Nov, 1983. மேற்படி வகுப்புகள் செப்டம்பர் 1-ம் திகதி முதல் பருத்தித்துறையிலும் தெல்லிப்பழையிலும் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கும், பதிவு செய்தலுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள். ரெம்பிள் ரீஸ், கந்தஉடையார் வீதி, புலோலி, பருத்தித்துறை- -சோதிவாசா, தெல்லிப்பழை மேற்கு. 8240

LL. B (Final) and 1st in Laws ஆரம்பம்:- 24-08-1983 காலை 9 மணி 1983 யூலையில் நடைபெற்ற பரீட்சையின் போது முடிவுற்ற பாடங்களுக்குரிய விசேட வகுப்புகள் இடம்பெறும். விரிவுரைகள் கொழும்பு பல்கலைக்கழக பகுதி நேர சட்ட விரிவுரையாளர் உட்பட அனுபவமும் தேர்ச்சியும் மிக்கவிரிவுரையாளர்களால்நடாத்தப்படும். விபரங்கட்கு: J. E. C. 33. Pt. Pedro Road JAFFNA. 8285

## வகுப்புகள்

ஒரு மாதகால வெல்டிங், வயரிங், மோட்டர் மெக்கானிசம் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. குறைந்த கட்டணம். J. E. C. 33. Pt. Pedro Road Jaffna. 8283

C. E. I. Part I May 1984 (London Exam); city and Guilds Part II. May 1984 (London Exam) இரண்டாவது பிரிவு வகுப்புகள் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:- J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 8284

## WANTED

A Chartered Accountant who was employed with leading frim in Colmbo wants a job in Jaffna district apply within 7 days Advt. No. 8288, C/o. Eelnadu, Jaffna. 8288

Wanted Corolla, Lancer or Sunny 77-80. No brouers Ready cash payable, Contact 17/1, St. Anne's Lane Chundikuli, Jaffna, Tel. 23415, Ask For Ronnie/Ganga. 8304

Doctor (R. M. P.) available for service. Part time or Full time Salary Negotiable. Apply to Advt. No: 8232C/o. Eelanadu, Jaffna. 8232

**வெரித்தாஸ்...**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தகவல்களை ஒலிபரப்புகிறது என இலங்கை அரசு செய்த புகாரைத் தொடர்ந்து இது நிறுத்தப்பட்டது. நிகழ்ச்சி தயாரிப்பாளர்களை பிலிப்பைன்சிலுள்ள இலங்கை தூதுவரும் சந்தித்து அதிருப்தி தெரிவித்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யூனிவேர்சல் ரெலெக்ஸ் உரிமையாளர்
சின்னையா கந்தசாமி அவர்களின்

## அந்தியேட்டி அழைப்பு



**சின்னையா கந்தசாமி**

**தோற்றம்: 02-11-1908 மறைவு: 25-07-1983**

அகாலமரணமான எமது அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டி கிரியை 21-08-1983 ஞாயிற்றுக்கிழமை 7 மணிக்கு திருக்கேதீஸ்வரத்திலும் வீட்டுக்கிரியைகள் 24-07-1983 புதன்கிழமை 11 மணிக்கு வீட்டிலும் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உதவி புரிந்தோருக்கும் எமது குடும்பத்தின் நன்றிகள்.

**மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்**

யாந்தோட்டம்,
நாவலர்மடம்,
நவிண்டில்,
கரவெட்டி.
8292

Meet And Eat At The
**YARL CHINESE RESTAURANT**
124, R, R. NALLIAH ROAD, JAFFNA.
(8293)

# அமிருக்கு சென்னைமருத்துவ மாணவர்கள் வரவேற்பு!

சென்னை, ஆக. 20

புதுடில்லியிலிருந்து சென்னை வந்து சேர்ந்த இலங்கை த. வி. கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்தை சென்னை விமான நிலையத்தில் சென்னை மருத்துவபீட விரிவுரையாளர்களும், மாணவர்களும் மாலைகள் அணிவித்து குதூகலமாக வரவேற்றனர்.

இவர்களுடன் சென்னை அரசியல் பிரமுகர்கள் சிலரும் விமான நிலையம் வந்திருந்தனர். திரு. அமிர்தலிங்கம் விசேட விமானமொன்றில் புதுடில்லியிலிருந்து வந்திருந்தார்.

விமான நிலையத்திலிருந்து சென்னை அரச விருந்தினர்கள் இல்லத்திற்கு திரு. அமிர்தலிங்கம் சென்றார். அங்கு 'காமராஜர் காங்கிரஸ்' தலைவர் திரு. நெடுமாறன் அவரைச் சந்தித்தார். நீண்டநேரம் இவர்கள் உரையாடினர்கள்.

சென்னையிலிருந்து ராமேஸ்வரம் சென்று கப்பல் மார்க்கமாகவே இலங்கை செல்லப் போவதாக திரு. அமிர்தலிங்கம் கூறியுள்ளார். விமான மார்க்கமாக இலங்கை செல்வது தற்போதைய நிலையில் பாதுகாப்பற்ற பயணம் என்று அவர் தெரிவித்தார். அடுத்த வார முற்பகுதியில் அவர் இலங்கை திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (கி)

## கரவெட்டிப்பகுதி அகதிகளுக்கு உணவு விநியோகம்

(கரவெட்டி)

வன்செயலால் பாதிக்கப்பட்டு அகதிகளாகக் கரவெட்டிப் பகுதியில் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் வைத்து நேற்று இவ்வுணவுப் பொருட்களை பிரிவு உதவி அரசாங்க அதிபர் வழங்குவார். (அ)

# கலைஞரைச் சந்திக்க அமிர் திருச்சி சென்றார்!

(சென்னை)

இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையிலிருந்து விமானமூலம் திருச்சிராப்பள்ளி போய்ச் சேர்ந்தார்.

தஞ்சாவூர்ப் பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் தி. மு. க. தலைவர் திரு. மு.கருணாநிதியைச் சந்திக்கவே திரு. அமிர்தலிங்கம் திருச்சி சென்றுள்ளார்.

திரு. கருணாநிதி தமது சுற்றுப் பயணம் காரணமாக சென்னையில் திரு. அமிர்தலிங்கத்தைச் சந்திக்க முடியாதிருந்தது. இதன் காரணமாகவே திரு. அமிர்தலிங்கம் அவரைச் சந்திக்க திருச்சி சென்றுள்ளார். திரு. அமிர்தலிங்கம் நேற்று மாலையே சென்னை திரும்பினார். (கி)

# பெண்களைத் தாழ்த்தும் பாடநூல்களுக்கு தடை!

புதுடில்லி, ஆக. 20

''ஆண்களைவிட பெண்கள் தாழ்வானவர்கள் என்ற அபிப்பிராயத்தை உண்டுபண்ணும் பாடநூல்களை கல்லூரி, பள்ளி மாணவர்கள் மத்தியில் வெளியிடுவது தவிர்க்கப்படவேண்டும்'' என்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து சகல இந்திய மாநிலங்களுக்கும், இந்திய மத்திய அரசு மேற்குறிப்பிட்ட அபிப்பிராயத்தை எழுப்பும் பாடநூல்களைத் தயாரிக்க வேண்டாமென உத்தரவிட்டுள்ளது.

திருமதி இந்திரா காந்தி இந்திய ராஜ்ய சபையில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு வலியுறுத்திக் கூறினர்.

''திரைப்படங்கள், பாடநூல்கள் என்பனவற்றில் பெண்கள் ஆண்களைவிட சமூக அந்தஸ்தில் குறைவானவர்கள் என்ற கருத்துக்கள் பலகாலமாக இருந்துவருகின்றன. இதனல் இளஞ்சந்ததியினரிடையே பெண்கள் ஆண்களைவிட தாழ்வானவர்கள் என்ற அபிப்பிராயம் தோன்ற வழி பிறக்கிறது. எனவே எதிர்காலத்தில் இத்தகைய அபிப்பிராயத்தை தவிர்க்க பெண்கள் பற்றி உயர்ந்த எண்ணங்களை தோற்றுவிக்கும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்'' என்றர்.

சிலவாரங்களுக்கு முன்னர் இந்தியப் பெண்களை இழிவுபடுத்தும்வகையில் விளம்பர மோஸ்ரர்களில் இந்தியப்பெண்கள் இடம்பெறுவது தவிர்க்கப்படவேண்டுமென்று இந்திய பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (கி)

## இளம்தாய்க்கு 10நிமிடங்களில் 6சிசுக்கள்!

லண்டன், ஆக. 19

பிறேஸில் நாட்டில் இளம் வைத்திய தாதி ஒருவருக்கு பத்து நிமிடங்களில் ஆறு சிசுக்கள் பிரசவமாகின. இவற்றில் நான்கு ஆண்கள். இரண்டு பெண்களாகும்.

இத்தாதிக்கு வயது 24 ஆகும். 'சிசரியன்' சத்திரசிகிச்சை மூலமே இச்சிசுக்கள் பிரசவமாகின. தற்போது தாயும் சேய்களும் நலமாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

# "யாழ். வந்துள்ள அகதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குக!"

## தொழில் அதிபர்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொழில்களை இழந்து அகதிகளாக யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உதவும்படி அகதிகள் புனர்வாழ்வு நிதிய இயக்குநர் சபை செயலாளர் திரு, க. வை. நவரத்தினம்தொழில் அதிபர்களையும், வேறு ஸ்தாபன உரிமையாளர்களையும் கேட்டிருக்கிறார்.

திரு. நவரத்தினம் இதுசம்பந்தமாகத் தெரிவிக்கையில் அகதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்றும் அந்த நிரந்தர திட்டங்கள் நடைமுறைக்கு வரும் வரை தற்காலிகமான தொழில் வாய்புக்கள் தரக்கூடியதொழில் அதிபர்களையும் ஸ்தாபன உரிமையாளர்களையும் ''இயக்குநர் சபை, அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983 வை. எம். சி. ஏ. கட்டிடம், கண்டிறோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.'' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவேண்டுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார். (மா)

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் அரிசியின் விலை மீண்டும் குறைந்துள்ளது.

நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது 8 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ அரிசி தற்போது 6 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# என்கோமாவை வெளியேற்றும் பிரேரணை கைவிடப்பட்டது

சலிஸ்பரி, ஆக. 20

தாயகம் திரும்பியுள்ள ஸிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவர் திரு. யோசுவா என் கோமாவை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றும் பிரேரணையை ஸிம்பாப்வே ஆளுங்கட்சி வாபஸ் பெற்றுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இங்கிலாந்திலிருந்து ஸிம்பாப்வே திரும்பிய திரு. என்கோமா ஸிம்பாப்வே பாராளுமன்றத்தின் கூட்டங்கள் பலவற்றுக்குச் சமூகம் தரவில்லை. இதனை அடுத்தே இவரை பாராளுமன்றத்திலிருந்து நீக்கும்பிரேரணையைக் கொண்டுவர ஸிம்பாப்வே ஆளுங்கட்சி முடிவுசெய்திருந்தது.

ஸிப்பாப்வே அரசியலமைப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 21 பாராளுமன்றக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்காதுபோனல் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழப்பார்.

இதேவேளை திரு.என்கோமா தமது நிலைகுறித்துஸிம்பாப்வே பாராளுமன்றத்தில் விளக்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. என்கோமா ஸிம்பாப்வே பிரதமர் திரு.றொபேர்ட் முகாபேயின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து நாட்டைவிட்டுச் சென்றரெனக் கூறப்படுகிறது. இவ்வாறு நாட்டைவிட்டுச் சென்று 5 மாதங்கள் பிரிட்டனில் இவர் தங்கியிருந்தது, தமக்குத் தாமே இவர் விதித்துக்கொண்ட 'அஞ்ஞாதவாசத்' தண்டனையென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## சந்தை கூடியது

(மன்னர்)

மன்னர் வாராந்தச் சந்தை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினல் மன்னர் வாராந்தச் சந்தை கடந்த சில வாரங்களாக இயங்காதிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

# ★ வெளிநாட்டில் இருக்கும் நிபுணர்களைச் சீன அழைக்கிறது!

பீக்கிங், ஆக. 20

சீன வெளிநாடுகளில் வாழும் தனது வம்சாவளி விஞ்ஞானிகளையும், நிபுணர்களையும் உள்நாட்டில் சேவையாற்ற வரும்படி அழைத்துள்ளது.

1966-ம் ஆண்டு இடம்பெற்ற கலாசாரப் புரட்சியின் போது சீனவின் விஞ்ஞானிகள், அறிஞர்கள், மேதாவிகள் ஆகியோர் கிராமங்களில் வேலை செய்யும்படி அழைக்கப்பட்டனர். இவர்களின் மதிப்புக் குறைந்த காரணத்தினல் இவர்களில் பெரும்பான்மையினர் வெளிநாடுகளிலேயே தங்கிவிட்டனர். இதனல் சீன இத்தகைய மூளைசாலிகளின் சேவையை இழக்கவேண்டியேற்பட்டது.

பின்னர் 'டெங்கியாபிங்' காலத்தில் இவர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு வலியுறுத்தப்பட்டது. இதன் ஒரு அம்சமாகவே சீன இம்மூளைசாலிகளை இப்போது உள்நாட்டுக்கு சேவையாற்ற வரும்படி அழைத்துள்ளது. (சூ)


## ரஸ்ற் ரவல் சேர்விஸ்

## TRUST TRAVEL SERVICE

தலைமைக் கந்தோர்:

11/A. மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்.நகர்.

65, சதாம் வீதி,
ஹைதிராமணி ஆர்காட்,
கோட்டை.

★ உலகின் எப்பாகத்திற்கும் விமான டிக்கட்டுக்களைக் குறைந்த செலவில் செய்து கொள்வதற்கு உடன் நாடுங்கள்.

★ கனடா செல்வதற்குக் குறைந்த செலவில் போய்வர (Return) ரிக்கட் செய்துகொடுக்கப்படும். மீளளிப்பு (Refund) தரப்படும்.

★ மத்திய கிழக்கு நாடுகளுக்கு 10% கழிவுடன் டிக்கட் செய்து தரப்படும்.

★ மற்றும் பாஸ்போட், இந்தியன் விசா செய்துகொள்வதற்கும் உடன் நாடுங்கள்.

## நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

உங்கள் முதலீட்டிற்கு பொன்னன வாய்ப்பு நீங்கள் அடையும் நன்மைகள்.

★ உடன் உபயோகிக்காத பணத்திற்கு நிரந்தர வருமானம்.

★ தொழிலில் இருந்து ஓய்வுபெற்றவராயின் கவலையின்றிநிரந்தர மாதாந்த வருமானம்.

★ கம்பனிப் பங்குகள் போன்று சந்தையில் ஏற்படும் மாற்றங்களால் உங்கள் முதலீடுகள் பாதிக்கப்படமாட்டாது.

குளிர் சாதனப்பெட்டி, தையல் இயந்திரம், ரி. வி. முதலியவற்றிற்கும் மற்றும் சகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்களிற்கும்

60% நிதியுதவியுடன் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

"SHABRA"
UNICO FINANCE LIMITED

61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு — 4,
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல. 22073

1983 Nov. பரீட்சைக்கான

## I C M A Section "A" and "B"

துரித மீட்டல் வகுப்புகள்

## ஆரம்பம் 23-8-83

விரிவுரையாளர்:- திரு. R. Sivakumaran

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்

★ ICMA, ACCA, ICA ஆகிய (London Accountancy) பரீட்சைக்கான வினத்தாள்களிலிருந்து 100க்கும் அதிகமான வினக்களுக்கு விடை அளிக்கப்படும்.

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD JAFFNA

# இவர்களைக் கைது செய்ய உதவினால் ரூ. 50,000 சன்மானம்!

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட இயக்கங்களைச் சேர்ந்த மூவரை கைதுசெய்ய உதவுபவர்களுக்கு சன்மானமாக தலா ரூபா 50 ஆயிரம் வழங்கப்படுமென்று பொலிசார் அறிவித்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. ரோகண விஜேவீர, நவ சமசமாஜ கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார, மக்கள் விடுதலை முன்னணியைச்சேர்ந்ததிரு உபதிஸ்ஸகமநாயக்கா ஆகிய மூவரையும் கைது செய்ய உதவுபவர்களுக்கே இந்த சன்மானம் வழங்கப்படவுள்ளது.

# யாழ். வைத்தியசாலைகளுக்கு மருந்துவகை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட அரசாங்க மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இவ்வருட மூன்றும் கந்தாயத்திற்குத் தேவையான மருந்து வகைகளை யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு நேரடியாகக் கொண்டு சென்று விநியோகம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இதனால் இப்பகுதி அரசினர் மருந்தகங்களில் நிலவிய மருந்துத் தட்டுப்பாடு நீங்கி விடுமென கருதப்படுகிறது.

வடபகுதி ரயில் சேவைகள் பாதிப்படைந்ததினால் மூன்றும் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை உரியகாலத்தில் விநியோகிப்பதில் தடங்கல் ஏற்பட்டது. யாழ். மாவட்ட சுகாதார சேவைகண்காணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம் மேற்கொண்ட முயற்சியினால் யாழ் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் அனுராதபுரம் சென்று இந்தமருந்துவகைகளை எடுத்து வந்துள்ளதைத்தொடர்ந்து மருந்து விநியோகம் இவ்வாரம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், அளவெட்டி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கு மருந்து விநியோகம் செய்யப்பட்டது.

மற்றைய வைத்தியசாலைகளுக்கும் விரைவில் மருந்து விநியோகம் செய்யப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# தந்தை ஏசியதால் தனயன் தற்கொலை

## மிருசுவிலில் சம்பவம்

(மட்டுவில்)

தந்தை ஏசியதால் மனவிரக்தியுற்ற தனயன் மிளகாய் தோட்டத்திலிருந்தபடியே கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

மிருசுவில் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் சிதம்பரப்பிள்ளை முத்துலிங்கம் என்ற 24 வயது வாலிபரே மரணமான வாலிபராவார்.

சாவகச்சேரிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினார். சாவகச்சேரிப் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வேதநாயகம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இறந்தவரின் தந்தை சி. சிதம்பரப்பிள்ளை தனது சாட்சியத்தில் கூறியதாவது:-

இறந்தவர் எனது மகன் இவர் மிளகாய் தோட்டத்தில் காவலிருந்தார். நான் மதிய சாப்பாடு கொண்டு தோட்டத்திற்குச் சென்ற போது காவலுக்காக இருந்த அவர் நன்றாகத் தூங்கிவிட்டார். கிளிகள் மிளகாய்களை அரித்துக் கொட்டியிருந்தன.

இதைக் கண்ட நான் தூங்கியிருந்தவரை எழுப்பிப் பிடரியில் ஒரு தட்டுத்தட்டிவிட்டு கிளியரித்துக் கொட்டிய மிளகாய்களைப் பொறுக்கிக் கொண்டு வந்தேன். நான் பேசியதால் ஆத்திரமுற்ற அவர் கிருமிநாசினி அருந்தி மரணமானார் என்றார்.

சாட்சியத்தைப் பதிவு செய்து கொண்ட மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (சூ)




உங்கள் பணத்திற்கு.... 28% வட்டி...

சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

| காலம் | ரூபா 500/- — ரூபா 99,999/- | | ரூபா 100,000/- அதற்கு மேல் | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் | கால முதிர்வு | மாதம் | கால முதிர்வு |
| 3 மாதம் | — | 16% | — | 17% |
| 6 மாதம் | — | 17% | — | 19% |
| 12 மாதம் | 19% | 22% | 20% | 23% |
| 18 மாதம் | 20% | 23% | 21% | 24% |
| 24 மாதம் | 21% | 25% | 22% | 26% |
| 30 மாதம் | 22% | 26% | 23% | 27% |
| 36 மாதம் | 23% | 27% | 24% | 28% |

the maharaja organisation

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்

122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள் 27% வரையுண்டு

| | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு மாதாந்தம் வட்டி | காலமுதிர்வு வட்டி | 1,00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 23% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250,000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | [illegible] 706 147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | 323 480 | 12,139,162 |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | 18[illegible],417 | 66[illegible] 48[illegible] | 2,135,87[illegible] |
| நிகரலாபம் (வரிகட்டிய பின்) | 163,916 | 453,777 | [illegible] 635,873 |
| பங்குலாபம் | — | 250,000 | 187,500 |

இயக்குனர்கள்

1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. எல் குமாரசாமி, F.C.A (Eng. & Wales), ATII (Eng.) M. Inst. A.M (Eng.), AMBIM (Eng.) F.C.A. (Cey)
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons A I B (Lond) சட்டத்தரணி
6. திரு. டி ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A A.C.M.A
7. திரு. டபிளயு பலநாயக்கா MBIM (Eng.)
8. திரு. [illegible] குணசேகரா

வியாபார நோக்கங்கள்

★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு, இயந்திராதிகள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2
காரியாலயம்: 5[illegible] பாங்ஷால் வீதி கொழும்பு.


வலி. தென் மேற்கு உதவி அரச அதிபர் பிரிவு

# உதவிப்பொருட்கள் இன்று விநியோகம்

(பண்டத்தரிப்பு)

தென்னிலங்கையிலிருந்து கலவரங்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாகத் திரும்பிய வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு உணவு, உடை போன்ற உதவிப் பொருட்கள் சண்டிலிப்பாயிலுள்ள வலி தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து இன்று 21-ம் திகதி காலை வழங்கப்படவுள்ளது.

அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்டுள்ள இந்த உதவிப் பொருட்களை அன்றைய தினத்தன்று நேரில் சமுகம் தந்து பெற்றுக்கொள்ளுமாறு வலி தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது பிரிவிலுள்ள சகல கிராமசேவை அலுவலர்களையும், விசேட சேவை அலுவலர்களையும் அன்றைய தினம் தமது அலுவலகத்திற்கு சமுகமளித்து இந்த உதவிப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிப்பதில் தமக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் திரு. மகாதேவா அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் கேட்டுள்ளார்.

# பண்டிதர் முயற்சி

[யாழ்ப்பாணம்]

வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களில் ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்தவர்களின் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஈடுபட்டுள்ளார்.

1983 - மே - ஆகஸ்ட் வன்செயல்களால் பாதிக்கப்பட்டோரின் விபரங்களைக் கோரும் படிவங்களைப் பண்டிதர் தயாரித்துள்ளார்.

இப்படிவங்கள் ஊர்காவற்றுறைக் கிராமோதய சபைத் தலைவர்களூடாக விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

பலவகையான விபரங்களடங்கிய இப்படிவங்களின் மாதிரிப் பிரதியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்களுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

வவனியாவில் நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இது சம்பந்தமாகத் தெரிவித்துள்ளதாகவும் அவர் சொன்னார். (மா)


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலண்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலண்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)

போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!

CROSS TRAVEL SERVICES (PVT) LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

# வேலையிழந்த பெண்கள் தொகை கணிப்பீடு!

(கொழும்பு)

வன்செயல்களின்போது வேலையிழந்த பெண்களின் எண்ணிக்கை கணிப்பிடப்படுகின்றது. இலங்கைப் பெண்கள் பணியகம் இக்கணிப்பீட்டு வேலைகளை ஆரம்பித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே தற்போது இவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பின்னர் படிப்படியாக இப்பணி விஸ்தரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலையிழந்த பெண்களின் எண்ணிக்கை கணிப்பிடப்படுவதுடன் அவர்களின் வாழ்க்கை நிலைவரம் என்பனவும் மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் வேலையிழந்த பெண்களுக்குச் சுயதொழில் வாய்ப்புக்களை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்க பெண்கள்பணியகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)


நீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM INDIA

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
10-30, 1-30, 3-30
Sean Connery 007
YOU LIVE ONLY TWICE
(Colour - Scope)

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30 6-30
ஜெய்சங்கர் -ராஜசுலோசனா
துணிவே துணை
கலர் - புதியபிரதி

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00
சிவாஜி - விஜயா
ராமன் எத்தனை ராமனடி

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
சிவாஜி — விஜயா
விஸ்வரூபம்
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)


## சில்லாலையிலும் அகதிகள் முகாம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புகிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள சில்லாலையில் கடந்த வியாழக்கிழமை அகதிகள் முகாம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த அகதிகள் முகாமில் 29 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

வலி-தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவாவின் ஏற்பாட்டின் பேரில் இந்த முகாமுக்கு பொறுப்பாக பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு தங்கியுள்ள அகதிகளுக்கு உணவு வழங்கும் பொறுப்பை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எஸ். நாகநாதன் தலைமையில் லயன்ஸ் கழக பிரமுகர்கள் உணவு வகைகளை முகாமிற்கு நேரடியாகக் கொண்டுவந்து வழங்கினர்கள்.

சில்லாலை கிராம அபிவிருத்திச்சங்க செயலாளரும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ்ப்பாண மாவட்ட ஆணையாளருமான டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி அகதிகளுக்கு தேவையான இதர வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தார். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை தொண்டர்கள் சிலரும் இங்கு கடமையாற்றி வருகின்றார்கள்.

## ஆங்கிலத் திரைப்படங்கள்

(கொழும்பு)

கொழும்பில் இதுவரை தமிழ்த் திரைப்படங்கள் காண்பிக்கப்பட்ட தியேட்டர்கள் பலவற்றில் தற்போது ஆங்கிலப் படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கடந்த மாதம் 25ம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்து ஒத்திவைக்கப்பட்டு இம்மாதம் 18ம்திகதிகொழும்பு லொத்தர் சபை தலைமை அலுவலகத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 940வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
**04 F 0389**
ரூபா 2,00,000

2ம் பரிசு
**20 Q 0772**
ரூபா 75,000

3ம் பரிசு
**02 R 0035**
ரூபா 25,000

தலா 900 ரூபா ஆறுதல்பரிசு பெறும் 100 டிக்கட்டுக்கள்விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 06 A 0390 | 08 A 0288 |
| 10 A 0606 | 11 A 0809 |
| 02 B 0078 | 03 B 0133 |
| 03 B 0460 | 10 B 0456 |
| 20 B 0312 | 06 C 0178 |
| 14 C 0769 | 16 C 0382 |
| 17 C 0542 | 02 D 0907 |
| 05 D 0880 | 06 D 0511 |
| 07 D 0270 | 10 D 0471 |
| 17 D 0581 | 20 D 0904 |
| 01 E 0975 | 16 E 0887 |
| 18 E 0127 | 18 E 0430 |
| 18 E 0631 | |
| 04 F 0880 | 05 F 0442 |
| 03 G 0541 | 07 G 0970 |
| 11 G 0371 | 20 G 0982 |
| 03 H 0801 | 01 J 0695 |
| 01 J 0881 | 02 J 0404 |
| 06 J 0604 | 09 J 0923 |
| 11 J 0452 | 12 K 0573 |
| 17 K 0665 | 14 L 0484 |
| 17 L 0760 | 20 L 0188 |
| 20 L 0594 | 06 M 0221 |
| 07 M 0554 | 14 M 0377 |
| 15 M 0395 | 06 N 0396 |
| 11 N 0559 | |
| 17 N 0762 | 01 O 0187 |
| 02 O 0555 | 05 O 0609 |
| 07 O 0141 | 09 O 0380 |
| 15 O 0478 | 17 O 0232 |
| 17 O 0817 | 03 P 0679 |
| 04 P 0617 | 11 P 0272 |
| 20 P 0090 | 01 Q 0113 |
| 02 Q 0097 | 07 Q 0247 |
| 15 Q 0496 | 16 Q 0358 |
| 01 R 0510 | 05 R 0037 |
| 06 R 0588 | 07 R 0612 |
| 14 R 0683 | 20 R 0973 |
| 03 S 0869 | |
| 07 S 0624 | 12 S 0492 |
| 05 T 0350 | 02 U 0142 |
| 06 U 0206 | 03 V 0146 |
| 19 V 0737 | 04 W 0848 |
| 11 W 0512 | 14 W 0929 |
| 15 W 0499 | 07 X 0220 |
| 15 X 0741 | 15 X 0905 |
| 17 X 0955 | 12 Y 0693 |
| 14 Y 0291 | 14 Y 0443 |
| 18 Y 0749 | 02 Z 0012 |
| 04 Z 0197 | 11 Z 0530 |
| 11 Z 0952 | 15 Z 0074 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

### இலங்கையில் அமைதிக்கு

# இரு சமூகத்தலைவர்களும் உண்மையான விருப்பம்!"

## இந்திய அமைச்சர் நரசிம்மராவ்

புதுடில்லி, ஆக. 20

''இலங்கையில் பெரும்பான்மை, சிறுபான்மை சமூகத்தவர்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தி நாட்டில் அமைதியை நிலைநாட்ட இரு சாராரினதும் தலைவர்கள் உண்மையானவிருப்பங்கொண்டுள்ளார்கள்'' என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

திரு. ராவ் மேலும் தெரிவித்ததாவது: ''இலங்கையில் இரு சமூகத்தவரிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்தும் நற்பணியில் இந்தியா இறங்கியுள்ளது. அச்சமூகத்தவர்களின் தலைவர்கள் தமது மக்களிடையே அமைதி, சமாதானம் நிலவவேண்டும் என்பதில் உண்மையான விருப்பம் கொண்டுள்ளனர். அவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் இது தெளிவாகத் தெரிகின்றது.

கொழும்பில் தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. அங்கு இந்தியப் பிரதமர் தமது விசேட பிரதிநிதியாக திரு. ஜி. பார்த்தசாரதியை அனுப்பிவைப்பது குறித்து அந்நாட்டு தலைவருக்கு தெளிவாக விளக்கியுள்ளார்.

கொழும்பு அகதிகள் முகாம்களில் சுமார் 15ஆயிரம் பேரே இருந்துவருகின்றனர். இந்திய உயர்ஸ்தானிகர் இந்த அகதிகளைப் பார்வையிட்டு நிலைமைகளை எமக்கு அறிவித்துள்ளார். எமது நாட்டின் புனர்வாழ்வு உதவிகள் யாவும் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவே பாதிக்கப்பட்ட மக்களை அடைகின்றன'' என்றார். (கி)

# ஹோட்டலில் எரிந்தநிலையில் எலும்புக் கூடுகளாக இரு சடலங்கள்

## பகிரங்கத் தீர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை அஜந்தா ஹோட்டலில் எரிந்த நிலையில் மண்டைஓடுகள் எலும்புக்கூடுகளாக இருந்த அடையாளம் காணமுடியாத இருவரது மரணம் தொடர்பான விசாரணையை அடுத்து பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கொழும்பு மரணவிசாரணை அதிகாரி திரு. வோல்டர் பெரேரா விசாரணை நடத்தினார்,

பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி டாக்டர் லக்ஷ்மன் சல்காடோ தீயினாலும் அதிர்ச்சியினாலும் மரணம் சம்பவித்ததெனத் தெரிவித்தார்.

புறக்கோட்டை பொலிஸ் சார்ஜன்ட் பெர்னாண்டோ விசாரணையின் போது சாட்சியமளிக்கையில், ஒல்கொட் மாவத்தையில் நான் கடமையில் ஈடுபட்டிருந்த போது கிடைத்த தகவலை அடுத்து உள்ளே சென்று பார்த்த போது ஒரு சடலம் எலும்புக்கூடாக ஹோட்டலின் கீழ் மாடியில் இருந்தது. மற்றொரு சடலம் 4-வது மாடியில் இருந்தது. இவற்றை ஆஸ்பத்திரி சவச்சாலையில் சேர்ப்பித்தேன்.

## சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் தேவஸ்தான புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று பகல் பத்து மணிக்கு நடைபெறவுள்ளது.

சுமார் பதினைந்து லட்சம் ரூபா செலவில் செய்யப்பட்டுள்ள இச்சித்திரத் தேர் சிற்பங்கள் யாவும் தமிழக சிற்பக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டதாகும்.


சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)
சுன்னாகம்

அறிவித்தல்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் கேள்விப்பத்திர மூலம் 4000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், வெற்று பரல்களும், கழிவு சீனி, கழிவு மாவும் விற்பனைக்கு இருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/-ம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-ம் மீளளிப்பு வைப்புப்பணமாக சங்கத்தில் செலுத்தி, சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி;- 26-08-83 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி.

பொதுமுகாமையாளர்.
சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
19-8-83. 8299


# இலங்கையில் காணாமல் போனவர் விபரம் சேகரிக்கப்படும்

## யாழ். செயலக மகாநாட்டில் முடிவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போது தென் இலங்கையில் காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுப்பதென்று யாழ். செயலகத்தில் நடந்த மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் பின்வரும் முடிவுகளும் எடுக்கப்பட்டன.

அகதிகள் புனர்வாழ்வுத் திட்டங்களை நாடிவருபவர்களுக்கு வேண்டிய தகவல்களை அதற்குரிய பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அறிந்து கொள்வதற்கு ஸ்தாபனங்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இடையே தொடர்பேற்படுத்துதல்.

நிதி சேகரிப்பதுடன், அத்தியாவசியமாகத் தேவைப்படும் துணி - மணிகள் பெறுவதற்கும் வேண்டுகோள் விடுப்பது.

போதியளவு கூடாரங்கள் பெறப்பட்டுள்ளதால் அவற்றை தகுதியான அகதிகளுக்கு கை மாற்றாக வழங்குதல்.

அகதிகள் முகாம்கள் ஆங்காங்கு நிறுவப்படும் போது ஏற்ற சமூக ஸ்தாபனங்களை பொறுப்பேற்று நடாத்துதல்.

பாடசாலைப் புத்தகங்கள், தளபாடங்கள் முதலியன தேவை குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு வகுப்பறைக்கும் தேவையான புத்தகங்கள் பற்றியும் இம் மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது.

களஞ்சியத்தில் போதியளவு உணவுப் பொருட்கள் இருப்பதால் அகதிகளுக்கு வேண்டிய உணவு வழங்க நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.


உடன் விற்பனவுக்கு

24 ஸ்ரீ 6763 இசுசு லொறி.
29 ஸ்ரீ 4373 மேர்ஸ்ரர் பஸ்.
29 ஸ்ரீ 5581 ரோசா பஸ்.
35 ஸ்ரீ 927 வான்.
27 ஸ்ரீ 627 வான் (உதிரிப்பாகத்திற்கு).
(ஜே. 2. வான்)

மேற் குறிப்பிடப்பட்ட வாகனங்கள் சம்பந்தமாக பினான்ஸ் வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் 31-8-83ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விபரங்களுக்கு:
சட்ட அதிகாரி,
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 23680.

### நல்லூரான்

வெண்பா

மண்டுதுயர் ஓடி மறைய மருந்தாகும்!
அண்டர் துயர்தீர்த்த அண்ணல்வேல் - பண்டிதர்கள்!
பாடிப் பரவுமினே! பண்ணுர் தமிழிசையால்
நாடித் துதித்து நயந்து.

வித்துவான். சி. ஆறுமுகம்

**புதிய....**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் கலந்து கொண்டனர்'

திரு. அமிர்தலிங்கம் புதுடில்லியிலிருந்து சென்னை திரும்பமுன்னர் இந்திராவின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு வரவுள்ள திரு. ஜி. பார்த்தசாரதியுடன் நீண்ட நேரம் கருத்துக்களைப் பரிமாறினர் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

# செஞ்சிலுவைத் தலைவர் சிவரத்தினம் அமைச்சர்களைச் சந்திப்பார்!

(கொழும்பு)

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசியப் பிராந்திய தலைவர் கலாநிதி கிங்ஸ்லி சிவரத்தினம் இலங்கை வந்துள்ளார்.

இவர் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவி குறித்து ஆராயவுள்ளார். இது சம்பந்தமாக பல முக்கிய அமைச்சர்கள், செயலாளர்கள்ஆகியோர் உட்பட சமூகசேவை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் இவர் சந்திக்கவுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் 'ஜெனீவா' பிரிவு இரண்டு கோடியே 50 லட்சம் ரூபாவை நிவாரணப் பணிகளுக்கென வழங்கியுள்ளது. இத்துடன் செஞ்சிலுவைச்சங்கம் மருந்து வகைகளையும், உணவுப்பண்டங்கள் பலவற்றையும் ஏற்கனவே கொடுத்துதவியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆஸ்திரேலிய, நோர்வே, பின்லாந்து, சுவீடன், இந்தியா, மேற்கு ஜெர்மனி, பிலிப்பைன்ஸ்கிளைகளும் பெருமளவு உதவிகளை இதுவரை வழங்கியுள்ளன. சிலகிளைகள்தொடர்ந்தும் வழங்கவுள்ளன. (கி)

## இன்று துர்க்கை அம்மன் தேர்

(யாழ்ப்பாணம்)

இன்று தெல்லிப்பளை அருள்மிகு துர்க்காதேவி அம்மன் ஆலய ரதோற்சவ தினமாகும். காலை ஒன்பது மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளுவார்.

நாளை திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் காலை எட்டு மணிக்கு இடம்பெறும். நேற்று சப்பரத் திருவிழா நடைபெற்றது. (கி)

**அகதிகளாக...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பிற்கு வந்து சேர்ந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் கூட்டமொன்றும், நேற்று முன்தினம் திரு. வணசிங்கா தலைமையில் மட்டக்களப்பில் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**அரசாங்க தனியார் ஊழியர்**

பாதிக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபன தனியார் ஊழியர்களின் ஆலோசனைக்கூட்டம் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நேற்றுக்காலை யாழ். பிரஜைகள் சங்க தலைவர் பேராசிரிர் லூதர்ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட ஊழியர் நடவடிக்கைக் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. இக்குழு பாதிக்கப்பட்ட ஊழியர்களின் நலன்களைக் கவனிக்கும்.

இக்குழு யாழ். பிரஜைகள் சங்கத்தின் ஒரு அங்கமாக இயங்குமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், அகதிகள் புனர் வாழ்வு நிதியத் தலைவர் டாக்டர் யோகு பசுபதி, பேராசிரியர் டாக்டர் ரி, ராமதாஸ் ஆகியோர் உரையாற்றினர்கள். (மா-க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்21-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

## யாழ். மாவட்ட லயன்ஸ் வலயத் தலைவர் நன்றி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்துள்ள மக்களுக்கு காங்கேசன்துறை முகாமிலும் மற்றும் இடங்களிலும் யாழ். மாவட்ட லயன்ஸ் கழங்கள் மற்றைய சேவை தாபனங்களுடன் இணைந்து செய்த சேவைக்கு யாழ். மாவட்ட லயன்ஸ் வலயத் தலைவர் லயன் இ. விஜயரத்தினம் நன்றி தெரிவித்துள்துள்ளார்.

அவர் தனது வலயத்தில் உள்ள லயன்ஸ் கழகங்களை தொடர்ந்து அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ஆவன செய்யுமாறும் கேட்டுள்ளார். இவ்விடயமாக லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர் பாமி இஸ்மாயிலுடனும் லயன் விஜயரத்தினம் தொடர்புகொண்டார். டாக்டர் இஸ்மாயில் கொழும்பில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு ஆற்றிய சேவைகளுக்கும் திரு. விஜயரத்தினம் நன்றி தெரிவித்தார்.

அகதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலும் தமது வலயத்திலுள்ள லயன்ஸ் கழகங்கள் ஆர்வங்காட்டுகின்றனவென்றும் திரு. விஜயரத்தினம் குறிப்பிட்டுள்ளார். (கி)

**புகலிடமளித்த...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்விற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினர்கள். பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். பி. ரணசிங்காவும் கலந்து கொண்டார். (க)

## கடற்கரை வீதி திறக்கப்பட்டது

(சுண்டிக்குளி)

குருநகர் இராணுவ முகாம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். கடற்கரை வீதி, பாவனைக்கு திறக்கப்பட்டது. முன்பு பாதுகாப்புக்காக இது சிலகாலம் மூடப்பட்டிருந்தது.

## வருடாந்த மகோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர அருள்மிகு முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. ஆலயப்பிரதமகுரு சிவ ஸ்ரீ ஐ. இரத்தினேஸ்வரக் குருக்கள் கொடியை ஏற்றி கிரிகைகளை நடத்தி வைத்தார். தொடர்ந்து பதினெரு தினங்கள் உற்சவம் நடைபெறும்.

## தேங்கிக்கிடக்கும் வடிகால்கள்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி கச்சேரியடியில் உள்ள வடிகால்கள் தேங்கி நின்று துர்நாற்றமெடுக்கின்றன.

இதனுல் ஏற்படக்கூடிய சுகாதாரக் கேடுகளையும் ஆபத்துக்களையும் விளக்கிச் சம்பந்தப்பட்ட சுகாதாரப் பகுதியினருக்குப் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்தும் இன்னமும் கவனிக்கப்படாதிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# துன்பங்களைத் தீர்க்கும் அன்னை மரியாள்

(கரவெட்டி)

''இறைவனுக்கும் மக்களுக்கும் இடையில் ஓர் பாலமாக அன்னை மரியாள் விளங்குகிருள். எங்கள் துன்பங்களுக்காக நாம் அவளிடம் உருக்கமாக வேண்டுதல் வேண்டும்''.

இவ்வாறு வணபிதா பிரான்சிஸ் அடிகளார் கரவெட்டி பரலோகமாதா ஆலய வருடாந்த உற்சவ இறுதித்திருநாளின் போது உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டிப் பங்குக்குரவர் அருட்திரு. ஏ. ஞானனந்தன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற கூட்டுத் திருப்பலியில் பிதா. பிரான்சிஸ் மேலும் கூறியதாவது:

''மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு அடுத்ததாக இறைவனுல்எடுத்துக் கொள்ளப்பட்ட கனி அன்னை மரியாளாகும், இறைவன் இவ்வுலகை மீட்கத் தன் மகனைப் பெற்றிடத் தேர்ந்தெடுத்ததும் மரியாளையேயாகும். அவளது அருளைப் பெறுவோர் பேறுபெற்றவர்கள்!!

இவ்வருடாந்த உற்சவம் அமைதியான முறையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆலயப் பிரதான கதவுகள் திறக்கவிடப்பட்டன.

இதனையடுத்து இப்பங்கின் தற்காலிக பங்குக் குரவரான அருட்திரு. ஞானனந்தன் அடிகளாரை யாழ். மேற்றிராசனம் கரவெட்டி பங்கின் நிரந்தரக் குரவராக நியமித்துள்ளது.

# போக்குவரத்துச் சபை ஊழியரும் உதவவேண்டும்

## வடபிராந்திய தலைவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு தமது சொத்துசுகங்களை இழந்து தாங்கொனுத் துயரங்களில் மூழ்கி மனமுடைந்த நிலையில் இப்பகுதிக்கு வந்துள்ள எமது இனத்தவரின் புனர்வாழ்வுக்காக எம்மால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துசபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் இச்சபையின் ஊழியர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் வேண்டுகோள் ஒன்றைவிடுத்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது சபையின் ஊழியர்கள் தங்கள் சம்பளப்பட்டியலில் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 3 மாதங்களுக்கு ஒரு மாதத்துக்கு ஒரு நாள் சம்பளம் என்ற அடிப்படையில் இப்புனர்வாழ்வு நிதிக்கு வழங்கும்படி கேட்டுள்ளார்.

இந்நிதிக்கு உதவுவதில் வடபிராந்திய இ. போ. சபை ஊழியர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிதி வட பிராந்திய இ. போ. சபையினுல் நேரடியாக அவர்களின் புனர் வாழ்வுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப்படுமென்று அச்சுற்று நிருபத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (சூ)

**கிளிநொச்சியில்**

# மற்ருெரு அகதிகள் முகாம் அமைக்க ஆலோசனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அகதிகள் முகாமில் அகதிகள் அதிகரித்ததை தொடர்ந்து மற்ருெரு அகதிகள் முகாம் அமைக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும் மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்தும் தினமும் தனியார்வாகனங்களில் கிளிநொச்சிக்குஅகதிகள் வந்து கொண்டிருக்கின்றனர்.

இதுவரை சுமார் 600 அகதிகள் இந்த முகாமிற்கு வந்துள்ளனர். இவர்களில் அதிகமானேர் பிரஜாவுரிமை பெற்ற தோட்டத் தொழிலாளர்களும் நாடற்ற பிரஜைகளுமாவர்.

இவர்கள் இன்னமரவடி ராஜகிரியா, ஹெந்தலை, வத்தளை, பாலத்துறை, மட்டக்குளி, மாத்தளை, நீர்கொழும்பு, களனி, குணுப்பிட்டி, வன்வாசல், நொச்சியாகம ஆகிய இடங்களை சேர்ந்தவர்களாகும் (க)

## ஒருநாள் சம்பளத்தை வழங்கினர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் பாதிக்கப்பட்ட அகதிகள் நிதிக்கு தமது ஒரு நாள் சம்பளபணத்தை அன்பளிப்பு செய்வதற்கு தீர்மானித்துள்ளனர். (க)

**அகதிகளுக்கு---**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், விற்பனையாளர்களும் தமது ஒரு நாள் சம்பளத்தை பாதிக்கப்பட்டு இங்கு வந்துள்ள அகதிகளுக்காக வழங்கினர். அத்துடன் உடைகளும் சேகரித்துக் கொடுத்துள்ளனர்.

## இன்று மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்த நயினர்கோவில் அருள்மிகு தேரடி ஞான வைரவர் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடைபெறவிருக்கின்றது.

## சுன்னுகத்தில் இன்று

(அரியாலை)

சுன்னுகம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் வருடாந்தவிழா மிகவும் அமைதியான முறையில் இன்று நடைபெறவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### செல்வி விஸ்வரம்யா

செல்வி விஸ்வரம்யா காலமானுர். இவர் வாழைச்சேனை கடதாசி ஆலை, விஸ்வநாதசர்மாவினதும், யாழ்ப்பாணம் சென்ற் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய ஆசிரியை திருமதி ஜானகி அவர்களின் மகளும், செல்வன் வித்தியாசங்கரின் அன்புத் தங்கையும் ஆவார். பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக இன்று (21-8-83) ஞாயிறு காலை 10-00 மணிக்கு 105/3, கச்சேரி நல்லூர் வீதி இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

8311

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா சுப்பிரமணியம்

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி கனகம்மா சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. S. தம்பித்துரை, திருமதி நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னுரின் ஈமச்சடங்குகள் இன்று 21-8-83 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு திருநெல்வேலியில் நடைபெறும். தகவல்: S. தம்பித்துரை

8312